தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 8, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

இது நமது கடமையென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு, நல்வினைகளெல்லாம் செய்யப்பட வேண்டிய கடமையாகும் என்று கூறுவர் அறிஞர்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) மக்களவைத் தலைவர் கூட்டிய கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் பங்கேற்காதது

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றங்களுக்கும், நீதித் துறைக்கும் மோதல் வலுத்து வருகிறது. கடந்த சில நாட்களாக இதுகுறித்துப் பொது விவாதம் நடைபெற்று வருகிறது. நேற்றையதினம், மக்களவை சபாநாயகர் அவர்கள், பேரவைத் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி இருந்தார்கள். இந்த மோதல் நல்லதல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் சட்டசபையின் அதிகாரம் என்ன? அதேபோல, நீதித் துறையின் அதிகாரம் என்ன என்பது தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். ஒன்றுக்கொன்று வரையறையைத் தாண்டிச் செல்லக்கூடாது; லட்சுமண ரேகையைத் தாண்டிச் செல்லக்கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். எனவே, நீங்கள்

நேற்றையதினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. ஆக, நம்முடைய நிலை என்ன, பேரவைத் தலைவருடைய நிலை என்ன, அரசின் நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள எல்லோரும் ஆவலோடு இருக்கிறார்கள். இந்த மோதல் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதிகாரங்களைப் பொறுத்த வரையில், ஒருவருடைய அதிகாரத்தில் இன்னொருவர் குறுக்கிடக்கூடாது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். எனவே நம்முடைய நிலை என்ன என்பதையும், பேரவைத் தலைவர் தன்னுடைய நிலை என்ன என்பதையும், ஏன் கலந்துகொள்ளவில்லை என்பதையும் விளக்குவார்கள் என நம்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து நம்முடைய சட்டப் பேரவையின் நிலையையும், சட்டப் பேரவையை உள்ளடக்கிய அரசின் நிலையையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 20–3–2005 அன்று புது டெல்லியில் அனைத்து மாநிலங்களின் சட்டப் பேரவைத் தலைவர்களின் கூட்டம் நடத்தப்பட உள்ளது என்றும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, மக்களவையின் செயலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அண்மையில் நடைபெற்ற நிகழ்வுகளின்பேரில், சட்டமன்றப் பேரவைகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் உள்ள உறவுகள் பற்றி விவாதிக்க இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழகச் சட்டமன்றப் பேரவை, நீதிமன்றங்களின்பால் வைத்துள்ள மிக உயரிய மரியாதையும், மதிப்பும் பன்னெடுங்காலமாகவே தொடர்ந்து வருகிறது. அதுபோன்றே நீதிமன்றங்களும் தமிழகச் சட்டப் பேரவைக்கு உரிய மதிப்பும், மரியாதையும் அளித்து வருகின்றன. எனவே, தமிழகத்தில் சட்டப் பேரவைக்கும், நீதிமன்றங்களுக்கும் என்றைக்குமே சுமுகமான உறவு நிலவி வருகிறது. அரசியல் சட்ட அமைப்பால் வரையறுக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின் எல்லைக்குள்ளேயே நீதிமன்றங்களும், சட்டமன்றமும் செயலாற்றி வருகின்றன. எனவே, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு அக்கூட்டத்தில் பங்கேற்கும் அவசியம் எழவில்லை என்று நான் கருதித்தான் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை...(குறுக்கீடு)